Chennai Metro Rail Limited

# சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

செய்தி வெளியீடு
26-11-2008

## சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்கு ஏலம் கேட்கவுள்ள ஒப்பந்தக்காரர்களின் ஆலோசனைக் கூட்டம்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு, கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ஏலம் கேட்கவுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு விளக்கம் அளிக்கும் கூட்டம் இன்று 26.11.2008 சென்னையில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்டின் தலைவர் திரு.முனீர் ஹோதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்தியா மற்றும் உலக அளவில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டனர்.

ரூ.11,124 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டம் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டு, சில பகுதிகளில் உயரமான வழியாகவும், சில பகுதிகளில் பூமிக்கு அடியிலும் இரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இதற்கு சிவில் மற்றும் சிஸ்டம் என்ற வகையில் ஒப்பந்தங்கள் பிரித்து வழங்கப்படும். சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் சேவையைப் பயன்படுத்தி, இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் குறித்தும், பணி ஒப்பந்தம், ஏலம் எடுப்போருக்கு தேவையான தகுதிகள், தேவைப்படும் அனுபவம் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர்கள் கடந்த பத்து ஆண்டு காலங்களில் மேற்கொண்ட பணிகள் குறித்தும், அவர்களது விற்பனை அளவு, செய்து முடித்த பணிகளின் அளவு ஆகியவைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் பிரதிநிதி, திரு.டெட்சுடாரோ கான்அவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவதற்கான ஒப்பந்தம், இந்திய அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையே 21.11.2008 அன்று டோக்கியோ நகரில் கையெழுத்திடப்பட்டது என்று தெரிவித்ததார். மேலும் அவர்கள் நிறுவனத்தின்

**கொள்கைகள் குறித்தும், கொள்முதல்களில் பின்பற்றத்தக்க வழிமுறைகள் குறித்தும் விளக்கமளித்தார். ஒப்பந்தக்காரர்கள் தங்கள் நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து விவரங்கள் தெரிவித்ததோடு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை எந்த வகையில் சிக்கனமாக செயல்படுத்தலாம் என்பது குறித்தும் ஆலோசனை வழங்கினர்.**

**இக்கூட்டத்தில் நிதித் துறை சிறப்பு செயலாளர் திரு.பிரவீன்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மேலான்மை இயக்குநர் திரு.பனீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

**73 இந்திய மற்றும் பன்னாட்டு ஒப்பந்தக்காரர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு விவாதத்தில் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் ஒப்பந்தத் தொகுப்புகள், ஒப்பந்த நிர்வாகம் மற்றும் விலைக் கட்டுப்படுத்துதல் குறித்து அவர்களது ஆலோசனைகள் பெறப்பட்டன.**

KSKrishnamurthy

(எஸ்.கிருஷ்ணமூர்த்தி)
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்